1986 மே 6] [திரு. என். எஸ். வி. சித்தன்]

அதேபோன்று ஒரேயொரு கோரிக்கை. காவல் துறை அலுவலர்கள் விடுப்பு முன் அனுமதி பெறாமல் 21 நாட்களுக்கு மேல் பணிக்கு வாராமல் இருந்த காரணத்தால் 'டெசர்டர்' என்று முடிவு செய்து பதவி நீக்கம் செய்ததை, மீண்டும் பதவியில் சேர அனுமதிக்கும் அரசாணையை 29—6—1981 அன்று வழங்க யிருக்கிறது. ஆனால் 40 வயதிற்கும் மேற்பட்டவர்களுக்கு அந்தச் சலுகை இல்லை. ஒரு மனிதாபிமான அடிப்படையில் இந்த அலுவலர்களையும், வேலையில் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தீயணைப்புத் துறை பற்றி நிறையப் பேச வேண்டுமென்றிருந்தேன் . . . (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலுரையை நாளைக் காலை வைத்துக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்பினார்கள். என்னைப் பொறுத்தவரையிலும் 3, 4 மணி நேரம் வரையிலும் வேண்டுமானால் பேசுவதற்கு நான் தயாராக இருக்கிறேன். ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் நாளை காலை கேள்வி நேரத்தை ஒத்திவைத்து விட்டு, பதிலுரையை வழங்கலாம் என்று கூறுகிறார்கள். நாளையதினம் தொழிலாளர் துறையினுடைய மானியக் கோரிக்கையும் வருகிறது. இருந்தாலும் கேள்வி நேரத்தை ஒத்திவைத்து, நாளைக்கு பதிலுரையை வழங்கலாம் என்ற கருத்தினுடைய அடிப்படையில் நாளைக்கு கேள்வி நேரத்தை ஒத்தி வைத்து, நாளைக்கு பதிலை ஏற்றுக்கொள்ளும்படியாக மாண்புமிகு பேரவைத் தலைவரை நான் கேட்டுக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

4. அரசினர் தீர்மானம்.

விதி 32-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப்பெற வேண்டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ நாளை (7—5—1986) தளர்த்த வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (7—5—1986) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-54 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

78. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள் மற்றும் 31—3—1983 ஆம் தேதி வரையிலான ஐந்தொகைக் கணக்குகள் [1948 ஆம் ஆண்டு மின்சாரச் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 69 (5) (ஏ) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (ஆங்கிலம்).

79. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள் மற்றும் 31—3—1984 ஆம் தேதி வரையிலான ஐந்தொகைக் கணக்குகள் [1948 ஆம் ஆண்டு மின்சாரச் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 69 (5) (ஏ) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது (ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்

ஏதுவுமில்லை.